செ.வெ.எண்.883 நாள் - 8-10-2010

## செய்திக் குறிப்பு

### அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை மாண்புமிகு மத்திய அமைச்சர் ஆ. இராசா ஆய்வு

அக்டோபர் 8, 2010

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி, மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.ஆ.இராசா, அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை தலைமைச் செயலகத்தில் இன்று ஆய்வு செய்தார். நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் சுவாமிநாதன், தமிழக அரசின் பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் உள்பட பல உயர்மட்ட அதிகாரிகளும், பொறியியல் வல்லுநர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வெள்ள காலத்தில் பவானி ஆற்றில் உபரியாக கிடைக்கும் தண்ணீரில் இரண்டு டி.எம்.சி.யை பயன்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. பில்லூரில் துவங்கும் பிரதான வாய்க்கால் அன்னூர் அருகே அச்சம்பாளையத்தில் முடிகிறது. கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் பல லட்சம் மக்களுக்கு பயன் அளிக்கும் இத்திட்டத்திற்கான சர்வே நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில் சில பகுதிகள் விடுபட்டுள்ளதாகத் தெரிய வந்ததால், குறிப்பாக அக்ரகார சாமக்குளம், கொண்டயம்பாளையம், எல்லப்பாளையம், தெலுங்குபாளையம், தேவம்பாளையம் மற்றும் பச்சாப்பாளையம் போன்ற பகுதிகளையும் சர்வேயில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

வெள்ள காலங்களில் மட்டுமே தண்ணீர் எடுக்க முடியும் என்பதால், குறைவான நேரத்தில் அதிகபட்ச தண்ணீரை எடுக்கும் விதமாக வாய்க்கால் அகலம் பெரியதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

ஆய்வின் போது, இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை பொதுப்பணித் துறை 2011 மார்ச் மாதத்திற்குள் அரசுக்கு அளிப்பதென்றும், இதுவரை நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இத்திட்டத்திற்கு சுமார் 650 கோடி ரூபாய் ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. திட்ட அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப் பெற்றதும், மாண்புமிகு முதல்வரின் அனுமதியோடு மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியோடு இத்திட்டம் நிறைவேற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்தத் திட்டத்தின் சர்வே பணியை விரைந்து முடிக்கவும், அதன் பின் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை வழங்கினார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

8/10/2010
தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், பொதுப்பணித்துறை